**ஆவின் விலை உயர்வால் தனியார் பால் விற்பனை அதிகரிக்கும்!**

ந. கார்த்திக்

First Published : 21 Nov 2011 05:02:54 AM IST



சென்னை,நவ.20: ஆவின் பால் விலை உயர்வால் தனியார் பால் விற்பனை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் முதல் இடம் பிடிப்பது பால். குழந்தைகள், நோயாளிகள், பெரியவர்கள் வரை அனைவரும் தினமும் ஏதேனும் வகையில் பயன்படுத்தக்கூடிய இன்றியமையாத பொருளாக பால் இடம்பெற்றுள்ளது.

தமிழகத்தில் ஆவின் நிறுவனம் மூலம் ஒரு நாளைக்கு சுமார் 20 லட்சம் லிட்டர் பால் விற்கப்படுகிறது. இதில் 6.5 லட்சம் லிட்டர் பால் அட்டைதாரர்களுக்கும், 13.5 லட்சம் லிட்டர் பால் சில்லறையாகவும் விற்கப்படுகிறது.

தனியார் நிறுவனப் பால் லிட்டருக்கு ரூ. 6 முதல் ரூ.10 வரை அதிகம் என்பதால் பொது மக்கள் ஆவின் பாலையே பயன்படுத்த ஆர்வம் காட்டி வந்தனர். இந்நிலையில் தனியார் பால் நிறுவனத்துக்கு இணையாக பால் விலையை தமிழக அரசு உயர்த்தியுள்ளதால், பெரும் இழப்பில் இருந்து ஆவின் நிறுவனம் மீளும் என்றாலும் - மறைமுகமாக, தனியார் பால் விற்பனையையே இது ஊக்குவிக்கும் என்று கூறப்படுகிறது.

சென்னை முகவர்கள் 34 இடைத்தரகர்கள் மூலம் ஆவின் பாலைப் பெற்று விற்கின்றனர். சென்னையில் மட்டும் ஒரு நாளைக்கு மொத்தம் 25 லட்சம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. இதில் 10 லட்சம் லிட்டர் பாலை ஆவின் நிறுவனமும், 15 லட்சம் லிட்டர் பாலை தனியார் நிறுவனங்களும் அளிக்கின்றன.

பால் விலை உயர்வதால் காபி, தேநீர் போன்ற பானங்களும் பாலைக் கொண்டு தயாராகும் இனிப்பு வகைகளும் இனி விலை உயரும். தயிர்,மோர், வெண்ணெய், நெய் ஆகியவற்றின் விலையும் உயர்ந்துவிடும்.

கடைக்காரர்களுக்குக் குறைந்த லாபம்: ஆவின் பாலைச் சில்லறை விற்பனையில் கடைக்காரர்கள் 25 பைசா என்ற குறைந்த லாபம் வைத்துதான் பொதுமக்களுக்கு விற்க வேண்டும். ஆனால் 25

பைசா என்பது குறைந்த லாபம் என்பதால் கடைக்காரர்கள் ரூ.1 முதல் ரூ. 1.50 வரை வாபம் வைத்து விற்றனர். இப்போது பால் விலை கணிசமாக உயர்ந்துவிட்டதால் சில்லறை வியாபாரிகள் விலையை மேலும் உயர்த்துவது எளிதல்ல. எனவே அவர்கள் ஆவின் பால் விற்பனையைத் தவிர்க்கவே பார்ப்பார்கள்.

ஆந்திரப் பால் நிறுவனங்களின் ஆதிக்கம்: சென்னை நகரில் ஆவின் பால் விற்பனைக்கு சவால் விடும் வகையில் ஆந்திரத்தைச் சேர்ந்த தனியார் பால் நிறுவனங்கள் பால் விற்றுவருகின்றன. சுமார் 5 தனியார் நிறுவனங்கள் சென்னையில் பெரும் ஆதிக்கம் செலுத்தி வந்தன. தனியார் பால் விலையைவிட ஆவின் விலை குறைவு என்பதால் மக்களிடம் பெரும் வரவேற்பு இருந்தது.

முகவர்கள் மூலம் நேரடியாகப் பால் விற்பனையை மேற்கொள்ளும் இந்த நிறுவனங்கள் லிட்டர் பாலுக்கு ரூ.1.5 முதல் ரூ. 2 வரை கடைக்காரர்களுக்கு லாபம் கிடைக்கும் வகையில் விற்கின்றன.

டீக் கடைகளில் தனியார் பால்: வீட்டில் டீ, காபி தயாரிப்பதற்காகப் பயன்படுத்தும் பாலை விட, டீக் கடைகளில் பயன்படுத்தப்படும் பாலின் அளவு பல மடங்கு அதிகம்.

கொழுப்புத் தன்மை அதிகம் நிறைந்த பாலையே கடைக்காரர்கள் பயன்படுத்த முன்வருகின்றனர். கடைக்காரர்களின் தேவைக்கு ஏற்ப தனியார் நிறுவனங்கள் பாலை சப்ளை செய்வது மட்டுமின்றி ஒரு லிட்டர் பால் ரூ.28 முதல் ரூ. 36 வரை என பல்வேறு விலையில் வழங்கி வந்தன. இந்நிலையிலும் குறைவான விலையில் ஆவின் பால் கிடைத்ததால் கடைக்காரர்கள் குறைந்த அளவில் பயன்படுத்தி வந்தனர். இப்போது அவர்களும் ஆவின் பாலைப் பயன்படுத்துவதைக் குறைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் பால் விலையும் உயருகிறது

சென்னையில் தனியார் பால் விற்பனை அதிகளவில் இருந்தாலும், ஆவின் பால் விலை குறைவாக இருந்ததால் தனியார் பால் விலை உயர்த்தப்படாமல் இருந்தது.

நகரில் நாளொன்றுக்கு 15 லட்சம் லிட்டர் பால் தேவையை தனியார் பால் நிறுவனங்கள் பூர்த்தி செய்துவந்தன. சராசரியாக லிட்டருக்கு பால் விலை ரூ.28 முதல் ரூ.36 வரை இருந்தது. இந்நிலையில் ஆவின் விலை உயர்ந்துள்ளதால் ஒரிரு நாளில் தனியார் நிறுவனங்கள் பாலின் விலையை லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.8 வரை உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் டீ விலை மேலும் ரூ. 2 வரை உயரும்.

**தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 21 Nov 2011 02:50:22 AM IST

சென்னை, நவ. 20: தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்துக்கு ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: கன்னியாகுமரியில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை சற்று வலுவிழந்து அதே இடத்தில் நீடிக்கிறது. இதனால் தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில் வானம் ஒரு சில நேரம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை சென்னை உள்பட தமிழகத்தில் பல்வேறு பகுதியில் ஓரளவுக்கு வெயில் அடித்தது. அவ்வப்போது வானில் மேகம் காணப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி தமிழகத்தில் அதிகபட்சமாக ராமேசுவரத்தில் 50 மில்லி மீட்டர் மழை பெய்தது. இது தவிர பாம்பனில் 30, திருச்செந்தூரில் 10 மில்லி மீட்டர் மழை பெய்தது.

**கொடைக்கானலில் பனிப்பொழிவு**

First Published : 21 Nov 2011 12:00:00 AM IST



படகு சவாரி செய்யும் சுற்றுலாப் பயணிகள்

கொடைக்கானல், நவ. 20: கொடைக்கானலில் இப்போது பனிப்பொழிவு அதிகரித்து வருவதால் குளிர் வாட்டுகிறது.

கொடைக்கானலில் டிசம்பர் மாதம் கடும் பனிப்பொழிவு நிலவுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக மேகமூட்டம் அதிகமாக உள்ளது. இதனால் மலைச் சாலைகளில் வரும் வாகனங்கள், முகப்பு விளக்குகளை எரியவிட்டு மெதுவாக வருகின்றன. சுற்றுலா இடங்களான பிரையண்ட் பூங்கா, மோயர் பாயிண்ட், வெள்ளி அருவி, பசுமைப் பள்ளத்தாக்கு, தூண் பாறை, குணா குகை, அமைதிப் பள்ளத்தாக்கு ஆகிய இடங்களில் அதிகமான மேகமூட்டம் நிலவுகிறது. இதனால் வழக்கத்துக்கு மாறாக அதிக குளிர் நிலவுகிறது. பகல் நேரங்களில் ஆங்காங்கே நெருப்புகளை மூட்டி சுற்றுலாப் பயணிகள் மற்றும் வணிகர்கள் குளிர் காய்ந்து வருகின்றனர். மாலை நேரங்களில் நிலவும் பனிப்பொழிவானது காலை வரை தொடர்கிறது.

கடந்த இரண்டு நாள்களாக சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரித்துள்ளது. வட இந்திய சுற்றுலாப் பயணிகளும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் கொடைக்கானலின் குளிரை ரசித்தபடி, ஏரியில் படகு சவாரி செய்கின்றனர்.

**வேளாண் பொருள்கள் இருப்பு வைக்க 33 கூட்டுறவு சங்கங்களில் தலா ரூ.8 லட்சத்தில் புதிய கிடங்கு: ஆட்சியர் தகவல்**

First Published : 20 Nov 2011 01:09:42 PM IST

தருமபுரி, நவ. 19: வேளாண் பொருள்களை இருப்பு வைக்க 33 கூட்டுறவு சங்கங்களில் தலா ரூ. 8 லட்சத்தில் புதிய கிடங்கு அமைக்க கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று ஆட்சியர் ஆர். லில்லி தெரிவித்தார்.

தருமபுரியில் 58-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவில், கூட்டுறவு கொடியை ஏற்றி வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆட்சியர் ஆர். லில்லி பேசியது:

மகளிர் மேம்பாட்டுக்காகவே அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை மூலம் 2 சர்க்கரை ஆலைகள், மத்தியக் கூட்டுறவு வங்கியின் 20 கிளைகள், 131 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், 2 கூட்டுறவு விற்பனைச் சங்கம், 47 பணியாளர் சங்கம், பயிற்சி நிலையம், 358 பால்வள சங்கம், 30 ஆடு வளர்ப்போர் சங்கம், 6 நெசவாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. 957 நியாய விலைக்கடைகளும் உள்ளன.

கடந்தாண்டு நஷ்டத்தில் இயங்கிவந்த 431 நியாயவிலைக் கடைகளுக்கு ரூ. 519 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறை மூலம் நடப்பாண்டு ரூ. 44 கோடிக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 13.14 கோடிக்கு ரசாயன உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 7 இடங்களில் வேளாண் சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் 32 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம், பென்னாகரம் கூட்டுறவு விற்பனை சங்கம் ஆகியவற்றில் தலா ரூ. 8 லட்சத்தில் புதிய கிடங்கு கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றார்.

ரூ. 3 கோடி உதவி: விழாவில், 1,565 பயனாளிகளுக்கு ரூ. 3 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு அமைப்புகளுக்கு கேடயம், பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**தேக்கு மரங்களை வெட்ட வனத்துறை அனுமதியே போதும்: விவசாயிகள் வலியுறுத்தல்**

First Published : 20 Nov 2011 11:16:15 AM IST

தக்கலை, நவ. 19: பொதுமக்கள் தங்களுடைய பட்டா நிலத்தில் உள்ள முதிர்ந்த தேக்கு மரங்களை வனத் துறையிடம் மட்டும் அனுமதி பெற்று வெட்டுவதற்கு என அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வில்லுக்குறியில் நடைபெற்ற இச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்துக்கு, சங்கத் தலைவர் வி.சி.வி. ரத்தினம் தலைமை வகித்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சொந்த பட்டா நிலத்தில் வளர்க்கப்பட்ட முதிர்ந்த தேக்கு மரத்தை சுயதேவைக்கு வெட்டுவதற்காக, வனத் துறையினரிடம் அனுமதி பெறவேண்டும் என்ற விதிமுறை உள்ளதாகத் தெரிகிறது.

வனத் துறையினரிடம் விண்ணப்பப் படிவம் பெற்று விண்ணப்பத்தின் மேல் நீதிமன்ற வில்லை ரூ. 10-க்கு ஒட்டி, அத்துடன் நிலத்தின் வரைபடம், பட்டா, நில உரிமைச் சான்று ஆகியவை வருவாய் வட்டாட்சியரிடமிருந்து பெற்றும், கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து சிட்டா அடங்கல் பெற்றும், சார்பதிவாளர் அலுவலரிடமிருந்து வில்லங்கச் சான்று பெற்றும் வனத் துறையினரிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளது.

தேக்கு மரக்கன்றுகளை இலவசமாக பொதுமக்கள் வளர்ப்பதற்கு வனத் துறை, தொண்டு நிறுவனங்கள் மூலமாக ஊக்கத்தொகை அளித்து அரசு ஊக்கப்படுத்துகிறது. முதிர்ந்த தேக்கு மரங்களை (10 ஆண்டுகளுக்கும் மேல்) சொந்த அவசியத்துக்கு வெட்டுவதற்கு கடினமான விதிமுறைகளைத் திணிப்பது நியாயம் அல்ல.

எனவே, தேக்கு மரங்களை வெட்டுவதற்கு வனத் துறையிடம் மட்டும் பெறப்படும் விண்ணப்பத்தின் மூலம் வெட்டிக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீவனப் பயிர் சாகுபடிக்கு மானியம்**

First Published : 20 Nov 2011 12:41:12 PM IST

தேனி, நவ. 19: தேனி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் தீவனப் பயிர் சாகுபடிக்கு அரசு மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது குறித்து கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் தனபாலன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தீவனப் பயிர் அபிவிருத்தி மற்றும் உபயோக மேலாண்மை திட்டத்தில் 25 சென்ட் நிலத்தில் இறவை பாசனத்தில் (கால் ஏக்கர்) கம்பு நேப்பியர் ஒட்டுப் புல் ரகம் கோ-3

அல்லது கோ-4, முயல் மசால் அல்லது வேலி மசால் ஆகியவை சாகுபடி செய்வதற்கு ரூ,2,590, மானாவாரியில் தீவனச் சோளம் அல்லது தீவன மக்காச்சோளம், தீவனத் தட்டைப் பயறு சாகுபடி செய்வதற்கு ரூ.1,350 மானியம் வழங்கப்படுகிறது. தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் அமைப்பதற்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.25 ஆயிரம், இதர விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரத்து 750 மானியம் வழங்கப்படுகிறது. கைகள் மற்றும் மின்சாரத்தால் இயக்கும் புல் வெட்டும் கருவி, தீவனப் புல் வெட்டும் கருவி வாங்குவதற்கு 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். ஊறுகால் புல் தயாரிப்புக்கு ரூ.30 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தில் மானிய உதவி பெறுவதற்கு விரும்புவோர் அந்தந்தப் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவர், விவசாய அலுவலர்கள் ஆகியோரை தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் தனியார் கடைகளுக்கு உரம் விற்பனை: விவசாயிகள் தவிப்பு**

சு. பழனி

First Published : 20 Nov 2011 11:00:53 AM IST

திருநெல்வேலி, நவ. 19: விவசாயிகளின் பெயரில் தனியார் உர வியாபாரிகள் தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் உரங்களைப் பெற்று வெளிமார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பதாக புகார் எழுந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பிசான சாகுபடி தொடங்கியுள்ள நிலையில், உரங்கள் முறையாகக் கிடைக்கவில்லை என விவசாயிகள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது.

தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு ரசாயன உரங்கள் வந்ததும் விற்றுவிடுவதாக ஊழியர்கள் கூறுகின்றனர்.

ஆனால், தனியார் உர விற்பனையாளர்கள், கூட்டுறவு வங்கிகளிடமிருந்து மொத்தமாக உரங்களை வாங்கிச் செல்வதாக விவசாயிகள் ஆதங்கப்படுகின்றனர்.

தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்குச் சென்று உரங்கள் கேட்டால் தட்டுப்பாடு உள்ளதாக அலுவலர்கள் கூறுவதாகவும், இதனால், அரசு நிர்ணயித்த விலையைவிட வெளிமார்க்கெட்டில் உரங்களின் விலை கூடுதலாக மூட்டைக்கு ரூ. 200 முதல் ரூ. 300 வரை விற்கப்படுவதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

மாவட்டம் வாரியாக தேவைப்படும் உரம் கணக்கெடுக்கப்பட்டு மாவட்ட நிர்வாகம் அதற்கான பட்டியலை அரசுக்கு அனுப்பியுள்ளது.

ஆனால், விவசாயிகளின் தேவைக்கு உரங்கள் இன்னும் வந்து சேரவில்லை என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் உர விற்பனையாளர்களுக்கு உரம் வழங்குவதை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும்.

தேவைக்கு உரம் கிடைக்க அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரி வருகின்றனர்.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது:

திருநெல்வேலி மாவட்டத்துக்கு 1,500 டன் டி.ஏ.பி. உரம் வந்துள்ளது. அனைத்து வேளாண் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து தூத்துக்குடி துறைமுகத்துக்கு யூரியா 36 ஆயிரம் டன் வந்துள்ளது. அதில் 5,000 டன் திருநெல்வேலி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள ஊழியர்கள் பிரச்னையால் லாரிகளில் சரக்குகளை ஏற்ற முடியாத நிலை உள்ளது. விரைவில் பிரச்னைக்கு முடிவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொட்டாஷ் உரமும் தூத்துக்குடி துறைமுகத்துக்கு வந்துள்ளது. உர நிறுவனங்கள் 50 சதவீத உரத்தை நேரடியாக தனியாருக்கு அனுப்புகின்றன. அரசு ஒதுக்கீடு இன்னும் கிடைக்கவில்லை.

இதற்கிடையே, காரைக்கால் துறைமுகத்துக்கு வந்துள்ள இந்தியன் பொட்டாஷ் நிறுவனத்தின் 20:20 காம்ப்ளக்ஸ் உரம் ரயில்வே மூலம் 2,500 டன் திருநெல்வேலிக்கு அனுப்ப ஏற்பாடு நடைபெறுகிறது. இன்னும் ஒருவாரத்தில் இம் மாவட்டத்தில் உரத் தட்டுப்பாடு நீங்கும்.

வேளாண் கூட்டுறவு வங்கிகளில் உரம் அதிக விலைக்கு விற்கப்படுவதை வேளாண், கூட்டுறவுத் துறைகள் இணைந்து கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அந்த அதிகாரி.

**தனியார் பால் பாக்கெட்டுகள் விலை உயரும் சூழல்**

First Published : 20 Nov 2011 02:45:05 PM IST

திருப்பூர், நவ.19: ஆவின் பால் விலையை அரசு உயர்த்தியதை அடுத்து தனியார் பால் பாக்கெட்டுகள் விலை மேலும் உயரும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால், ஆவின் பால் கிடைக்காத இடங்களில் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கோவை ஆவின் நிறுவனம் மூலம் திருப்பூர் பகுதிகளில் புதிய விலைப்பட்டியல்

அடிப்படையில் ஆவின் பால் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. அதன்படி, டோன்டு பால் ஒரு லிட்டர் ரூ.19லிருந்து ரூ.24ஆகவும், நிலைப்படுத்தப்பட்ட பால் ஒரு லிட்டர் ரூ.24.50லிருந்து ரூ.31ஆகவும், பசும்பால் ஒரு லிட்டர் ரூ.24லிருந்து ரூ.30ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதனால், ஆவின் பால் அங்காடிகளில் பால் வாங்க வந்த மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர்.

ஆவின் பால் விலை உயர்த்தப்பட்டுள்ளதை அடுத்து தனியார் நிறுவனங்களின் பால் பாக்கெட்டுகள் விலை மேலும் உயரக்கூடும் என்ற அச்சமும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே, தனியார் நிறுவனங்கள் வழங்கும் பால் பாக்கெட்டுகள் லிட்டர் ரூ.32க்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

இருப்பினும், குடியிருப்புகளின் அருகிலுள்ள மளிகை, பேக்கரிகளிலேயே கிடைப்பதால் கூடுதலான விலையாக இருந்தபோதிலும் அந்த பால் பாக்கெட்டுகளை மக்கள் வாங்குகின்றனர். தற்போது, ஆவின் பால் விலை உயர்வை அடுத்து தனியார் நிறுவன பால் பாக்கெட்டுகள் மேலும் விலையேற்றம் செய்யப்படும் என்று அச்சம் ஏற்பட்டுள்ளதால் ஆவின் பால் பாக்கெட்டுகள் எல்லா இடங்களிலும் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என்று மக்கள் வலியுறுத்துகின்றனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், ஆவின் பால் பாக்கெட்டுகள் பஸ் நிலையங்கள்,

முக்கிய சாலைகளில் மட்டுமே அங்காடிகள் அமைத்து விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால், தனியார் நிறுவன பால் பாக்கெட்டுகள் குடியிருப்புகள் நிறைந்த

இடங்களிலுள்ள மளிகை, பேக்கரி, ஹோட்டல்கள் என எல்லா இடங்களிலும் விற்கப்படுகின்றன. இதனால், பெண்கள் அதிகாலை நேரங்களில் நீண்டதூரம் நடந்து சென்று பால் வாங்கி வர சிரமம் அடைகின்றனர். இதனால், சற்று கூடுதல் விலையானலும் அருகில் கிடைக்கும் தனியார் நிறுவன பால் பாக்கெட்டுகளை வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகின்றனர். மக்களின் தேவையை கருத்தில் கொண்டு ஆவின் பால் பாக்கெட் வினியோகத்தை கூடுதலாக்கி அனைத்து இடங்களிலும் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்றனர்.

**உர விலையை குறைக்க வலியுறுத்தி டிச.2-ல் ஆர்ப்பாட்டம்: விவசாய சங்கங்கள் முடிவு**

First Published : 20 Nov 2011 01:12:12 PM IST

தஞ்சாவூர், நவ. 19: உர விலையை குறைக்க வலியுறுத்தி, டிச. 2-ம் தேதி மாநிலம் முழுவதும் வட்ட, மாவட்ட தலைமையிடங்களில் உள்ள மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்த விவசாய சங்கங்கள் முடிவுசெய்துள்ளன.

தஞ்சாவூரில் சனிக்கிழமை நடைபெற்ற அனைத்து விவசாயிகள் சங்கங்கள் சார்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மத்திய அரசின் உரக் கொள்கை காரணமாக நாடு முழுவதும் அனைத்து உரங்களின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது. விவசாயத்துக்கு தேவையான உரத்தை உரிய காலத்தில் இறக்குமதி செய்ய மத்திய அரசு முன்வராததால் பற்றாக்குறை கடுமையாக உள்ளது.

இதைப் பயன்படுத்தி செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, கூடுதல் விலைக்கு உரம் விற்கப்படுகிறது. தமிழகத்துக்குத் தேவையான உரத்தை மத்திய அரசிடமிருந்து தமிழக அரசு கேட்டுப் பெறவில்லை. மத்திய, மாநில அரசுகளின் இத்தகைய அணுகுமுறை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. நெல் குவிண்டாலுக்கு ரூ. 1,500, கரும்பு டன்னுக்கு ரூ. 3,000 வழங்க வேண்டுமென விவசாய சங்கங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இடுபொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த நிலையில் தமிழக அரசு ஊக்கத் தொகையாக நெல் சன்ன ரகத்துக்கு ரூ. 70, பொது ரகத்துக்கு ரூ. 50 அறிவித்திருப்பது நியாயமான உயர்வு இல்லை.

எனவே, தமிழக அரசு முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி, கரும்பு டன்னுக்கு ரூ. 3,000, நெல் குவிண்டாலுக்கு ரூ. 1,500 என அறிவிக்க வேண்டும். கொள்முதல் நிலையங்களை தேவையான இடங்களில் அமைக்க வேண்டும். கொள்முதல் நிலையங்களுக்கு வரும் அனைத்து நெல்லையும் 22 சதம் ஈரப்பதம் வரை கொள்முதல் செய்ய வேண்டும்.

**மாவட்டத்தில் 2, 500 ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு**

First Published : 20 Nov 2011 09:33:18 AM IST

கடலூர், நவ. 19: கடலூர் மாவட்டத்தில் 2,500 ஏக்கரில், நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டு உள்ளது.

சம்பா நெல் சாகுபடி காலம் வந்துவிட்டால், டெல்டா பாசனப் பகுதிகளாக இருந்தால் மேட்டூர் அணை திறக்கப்படுமா, வீராணத்துக்கு தண்ணீர் எப்போது வந்து சேரும், புயலால் பாதிப்பு ஏற்படுமா, வாய்க்கால் தூர்ந்து கிடக்கிறதா, நாற்று நட போதிய தண்ணீர் கிடைக்குமா என்றெல்லாம் விவசாயிகள் கவலைப்பட வேண்டும். ஆழ்குழாய் கிணற்றுப் பாசனமாக இருந்தால் தொடர்ந்து மின்சாரம் கிடைக்குமா என்ற கவலை.

ஆனால் எவ்விதக் கவலையும் இன்றி, வடகிழக்குப் பருவ மழையை மட்டுமே நம்பி மேற்கொள்ளப்படும் எளிய விவசாயம் தான் நேரடி நெல் விதைப்பு. ஏரி, குளம், வாய்க்கால், மின் இணைப்பு என்ற அமைப்பு ரீதியான பாசன வசதிகள் ஏதும் இல்லாத நிலங்களுக்கு, வடகிழக்குப் பருவமழை காலத்தில் ஏற்ற விவசாயமாகத் திகழ்வது நேரடி நெல் விதைப்பு.

கடலூர் மாவட்டத்தில் கடலூரை அடுத்த ஆலப்பாக்கம், புதுச்சத்திரம், பெத்தாங்குப்பம், பரங்கிப்பேட்டை, சின்னாண்டி குழி, பெரியாண்டி குழி உள்ளிட்ட 40 கிராமங்களிலும் திட்டக்குடி பகுதியில் சுமார் 10 கிராமங்களிலும் இந்த ஆண்டு 2,500 ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டு உள்ளதாக வேளாண் துறை தெரிவிக்கிறது.

இக்கிராமங்களில் பொன்னி, பிபிடி நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன. நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ள வயல்களில் நெற்பயிர் பொங்கலுக்கு அறுவடைக்குத் தயாராகி விடும் என்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

பெரும்பாலும் மணல் பாங்கான, பாசன வசதிகளற்ற நிலங்களில் நேரடி நெல் விதைப்பு செய்யப்படுகிறது. இதற்கு தண்ணீர் தேவை மிகவும் குறைவு. அவ்வப்போது பெய்யும் மழையே போதுமானது. சில ஆண்டுகளில் டிசம்பர் மாதத்தில் மழை இல்லாத நிலை ஏற்பட்டால், அருகாமையில் உள்ள குளங்கள் வாய்க்கால்களில் இருந்து, டீசல் என்ஜின் மூலம் தண்ணீர் எடுத்து வயல்களுக்கு பாய்ச்சுகிறார்கள்.

நாற்றங்கால் தயாரித்து, நாற்று நட்டு மேற்கொள்ளப்படும் விவசாயத்தைவிட, நேரடி நெல் விதைப்புக்கு விதை நெல் (ஏக்கருக்கு 35 கிலோ) அதிகம் தேவைப் படுகிறது. உரம் பூச்சி மருந்து மிகவும் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப் படுகிறது. உரத்தை ஒரே நேரத்தில் அளித்து விடாமல், 3 அல்லது 4 முறைகளில் கொஞ்சம் கொஞ்சமாக இடலாம்.

டெல்டா பகுதிகளில் ஏராளமான தண்ணீரைச் செலவிட்டு, மிகுந்த பயிர் பாதுகாப்பு செய்து, உரங்களை அள்ளிப்போட்டாலும், கிடைக்கும் மகசூல் சராசரியாக 30 மூட்டைதான் (மூட்டை 60 கிலோ). ஆனால் அதிக சிரத்தையின்றி, அதிக செலவின்றி நேரடி நெல் விதைப்பில் ஏக்கருக்கு 20 மூட்டைக்குக் குறைவின்றி மகசூல் கிடைக்கும் என்கிறார்கள் வேளாண் அலுவலர்கள்.

நேரடி நெல் விதைப்புக்கு வாய்ப்பு உள்ள நிலங்களில், நெல் தவிர சவுக்கு போன்ற பயிர்களும் காணப்படுகிறது. ஆனால் சவுக்கு மகசூலுக்கு 4 ஆண்டுகள் வரை காத்து இருக்க வேண்டும். நெரடி நெல் விதைப்பில் 120 நாள்களிலேயே மகசூலை பார்த்து விடலாம் என்கிறார்கள் விவசாயிகள்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**கால்நடை தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டங்களுக்கு மான்யம் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2011,23:18 IST

காஞ்சிபுரம் : லாபகரமான பால் உற்பத்திக்கு, அரசு மானியத்துடன் கூடிய தீவனப் பயிர் அபவிருத்தி திட்டங்கள், அரசால் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற

விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கால்நடைகளின் பராமரிப்பு செலவை குறைப்பதில், பசுந்தீவனம் முக்கியப் பங்காற்றுகிறது. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு, நேப்பியர் ஒட்டுப்புல், தானிய வகை தீவனப் பயிர்களான சோளம், மக்காச்சோளம் போன்றவற்றுடன், அதிக புரத சத்து நிறைந்த, வேலிமசால், முயல்மசால், தீவன வகை தட்டைப்பயறு, போன்ற பயிர்களை இறவையிலும், மானாவாரியிலும் பயிர் செய்து, கறவை மாடுகளுக்கு கலந்து வழங்குவதன் மூலம், அடர் தீவனத்தின் தேவை குறைந்து, பால் உற்பத்திக்கான செலவினம் குறைந்து, கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது.

விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை சீராக மேம்படுத்தும் நோக்கத்துடன், கால்நடை பராமரிப்புத் துறை மூலம், நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு, நேப்பியர் ஒட்டுப்புல் ரகம் கோ-3 அல்லது கோ-4 உடன் முயல் மசால் அல்லது வேலி மசால் தீவனப் பயிர்களை, 25 சென்ட் நிலப்பரப்பில் சாகுபடி செய்வதற்கு, 2,590 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மானாவாரியில் 25 சென்ட் நிலப்பரப்பில், தீவனச் சோளம் அல்லது தீவன மக்காச்சோளம் உடன், தீவன தட்டைப்பயறு சாகுபடி செய்ய, 1,350 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.
தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் அமைப்பதற்கு, குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு, 25 ஆயிரம் ரூபாய்(100 சதம் மானியம்), இதர விவசாயிகளுக்கு 18 ஆயிரத்து 750 ரூபாய்(75 சதம் மான்யம்) வழங்கப்படுகிறது. கையால் இயக்கப்படும் புல் நறுக்கும் கருவி மதிப்பில், 75 சதவீதம் மானியம், அதிகபட்சமாக 6,375 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

மின்சக்தியினால் இயங்கும் புல் நிறுக்கும் கருவி மதிப்பில், 75 சதவீதம் மான்யம், அதிகபட்சமாக 11 ஆயிரத்து 250 ரூபாய், வழங்கப்படுகிறது. தீவனப்புல் வெட்டும் கருவி மதிப்பில், 50 சதவீதம், அதிகபட்சமாக 12 ஆயிரத்து 500 ரூபாய், மான்யம் வழங்கப்படுகிறது. ஊறுகாய் புல் தயார் செய்வதற்கு 30 ஆயிரம் ரூபாய் மான்யம் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பம் உள்ள, கால்நடை வளர்க்கும் விவசாயிகள், தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர், அல்லது வேளாண்மைத் துறையை சேர்ந்த வேளாண்மை அலுவலரை நேரில் தொடர்பு கொள்ளலாம். விவசாயிகள் தாங்கள் பயன்பெற விருப்பம் உள்ள திட்டங்களை குறிப்பிட்டு, எழுத்து பூர்வமாக விண்ணப்பங்களை அளிக்க வேண்டும். இத்தகவலை கலெக்டர் சிவசண்முகராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**குறைந்த விலையில் விவசாய கருவிகள் திட்டக்குடி பகுதி விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2011,23:50 IST

திட்டக்குடி : திட்டக்குடி பகுதியில் ராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள் திடீர் பட்டறை அமைத்து விவசாயிகளுக்குப் பயன்படும் இரும்புக் கருவிகள் குறைவான விலையில் செய்து தருவது அவர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திட்டக்குடி, ராமநத்தம் உட்பட திட்டக்குடி தாலுகாவைச் சேர்ந்த பல்வேறு பகுதிகளில் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகள் விவசாய மற்றும் வீட்டு உபயோகத்திற்கு பயன்படும் கத்தி, கடப்பாறை, களைவெட்டி, கோடாரி உட்பட பல்வேறு ஆயுதங்களை அவர்கள் தற்காலிக பட்டறைகளில் செய்து
தருகின்றனர்.

ராஜஸ்தானைச் சேர்ந்த20 நபர்கள் திட்டக்குடி அடுத்த வதிட்டபுரம் பகுதியிலும், ராமநத்தம் பஸ் நிலையத்திலும் பொருட்களை விற்று வருகின்றனர். இதில் வியாபாரம் செய்பவர்கள் தங்கள் குடும்பங்களுடன் வந்து இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பெண்கள் உட்பட அனைவரும் சம்மட்டி அடித்தல், வார்த்தல் உள்ளிட்ட பணிகளைச் செய்வதை இப்பகுதி மக்கள் மிகுந்த ஆச்சரியத்துடன் பார்த்து பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.
திட்டக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெரும் அளவில் வந்து இரும்பு பொருட்களை வாங்கிச் செல்கின்றனர். கிலோ ஒன்றுக்கு 150 ரூபாய் வரை வசூலிக்கும் வியாபாரிகள் தரமான வகையில் விவசாயிகளின் விருப்பத்திற்கு ஆயுதங்களை வடிவமைத்து தருவதால் விவசாயிகள் இவர்களிடம் ஆர்வமாக வாங்கிச் செல்கின்றனர். தற்போது சந்தையில் கிடைக்கும் கருவிகளின் விலையை விட இவர்கள் குறைந்த விலையில் தரமானதாக கொடுப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயிகள் தங்களிடமுள்ள பழைய இரும்புகளையோ அல்லது பழுதடைந்த விவசாயக் கருவிகளையோ இவர்களிடம் மாற்றிக் கொண்டும், சீரமைத்துக் கொண்டும் செல்கின்றனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2011,22:27 IST

செஞ்சி : மேல்சித்தாமூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு விதை கிராம திட்டத்தின் மூலம் பயிற்சி முகாம் நடந்தது.
வல்லம் வட்டார வேளாண்மைத்துறை மூலம் மேல்சித்தாமூர் கிராமத்தில் விதை கிராமம் திட்டத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் முருகேசன் தலைமை தாங்கினார். வல்லம் வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி வரவேற்றார். வல்லம் ஒன்றிய சேர்மன் அண்ணாதுரை முகாமை துவக்கி வைத்தார். விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், விதைச்சான்று அலுவலர் நாராயணசாமி, வேளாண்மை அலுவலர் சரவணன் ஆகியோர் வேளாண்மை திட்டங்கள் குறித்து பேசினர். வல்லம் பி.டி.ஓ., ரவிச்சந்திரன், உதவி விதை அலுவலர் கர்ணன், உதவி வேளாண் அலுவலர் அபிமன்னன் கலந்து கொண்டனர்.

**சாகுபடி நிலங்களில் ஈரப்பதத்தை தடுக்க தடுப்பணையை உடைக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2011,23:56 IST

நங்கவள்ளி: சாகுபடி நிலங்களில் ஈரப்பதத்தை தடுக்க, தடுப்பணைகளை உடைத்து தண்ணீரை வெளியேற்றுவதால், நிலத்தடி நீர் மட்டம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.வடகிழக்கு பருவமழை காலத்தில் நங்கவள்ளி ஒன்றியம் வனவாசி மலையில் உற்பத்தியாகும் தண்ணீர் சாணாவூர், சூரப்பள்ளி, கோட்டைமேடு, காட்டம்பட்டி வழியாக வேம்பனேயில் கலக்கிறது. நிலத்தடி நீரை சேமிப்பதற்காக, ஓடையின் குறுக்கே, 10க்கும் மேற்பட்ட இடங்களில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது.சூரப்பள்ளி, கோட்டை, மேடு, காட்டம்பட்டி பகுதியில் ஓடையின் இருபுறமும் ஏராளமான விவசாய நிலங்கள் உள்ளது. தற்போது, விவசாயிகள் பருத்தி, சோளம், நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். கடந்த மாதம் பெய்த வடகிழக்கு பருவமழையால், ஓடையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி தடுப்பணைகள் அனைத்தும் நிரம்பியது.ஓடையின் இருபுறமும் நிலங்களில் சாகுபடி செய்த பருத்தி, கடலை போன்ற பயிர்களுக்கு நிலத்தில் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடாது. அதிக ஈரப்பதம் இருந்தால் மகசூல் பாதிக்கும். தற்போது ஓடை தடுப்பணையில் தண்ணீர் தேங்கி நிற்பதால், சாகுபடி நிலங்கள் சேறும் சகதியுமாக உள்ளது.அதனால், மகசூல் பாதிக்கும் என்பதால், கரையோர விவசாயிகள் தடுப்பணைகளை உடைத்து, ஓடையில் தேங்கும் நீரை வெளியேற்றுகின்றனர். தடுப்பணைகளில் தண்ணீர் தேங்காமல், கீழ்பகுதிக்கு செல்வதால், தடுப்பணை உடைக்கப்பட்ட பகுதியில் நிலத்தடி நீர்

மட்டம் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.இதனால், கோடைகாலத்தில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறையும் என்பதால், அருகில் உள்ள கிராமங்களை சேர்ந்த மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். எனவே, தடுப்பணைகள் உடைக்கப்படுவதை தடுக்க வேண்டும் என, கோரிக்கை விடுத்துள்ளனர்

**வீணாகும் மா பிஞ்சுகள் மூலம் ஊறுகாய் தயாரிக்கும் திட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2011,22:50 IST

கிருஷ்ணகிரி : ""கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கூட்டுறவு சங்கங்கள் மூலம், வீணாகும் மா பிஞ்சுகளை சேகரித்து, ஊறுகாய் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்," என்று கலெக்டர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.ருஷ்ணகிரியில், 58வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடந்தது. கலெக்டர் மகேஸ்வரன் தலைமை வகித்தார். ஊத்தங்கரை எம்.எல்.ஏ., மனோரஞ்சிதம் முன்னிலை வகித்தார். கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். விழாவில், அரசு நலத்திட்ட உதவிகள், சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் மற்றும் கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு நடந்த பல்வேறு போட்டிகள், கலை நிகழ்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், எஸ்.எஸ்.எல்.ஸி., ப்ளஸ்2 பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் பரிசு வழங்கி கலெக்டர் மகேஸ்வரன் பேசியதாவது:இந்தியாவில் மற்ற மாநிலங்களில் ரேஷன் கார்டு வைத்துள்ள அனைவருக்கும் அரிசி வழங்கப்படுவதில்லை. தமிழகத்தில் மட்டும்தான் ரேஷன் கார்டு வைத்துள்ள அனைவருக்கும், விலையில்லா தரமான அரிசி வழங்கப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கூட்டுறவு சங்கங்களின் மூலம் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்படுகிறது.கிராமப்புறங்களில் ஒவ்வொரு ரேஷன் கடைக்கும், 10 பேர் கொண்ட பொதுமக்கள் குழு அமைக்கப்பட்டு, அந்த குழுவில் இடம் பெற்றுள்ளவர்களின் மொபைல்ஃபோன் எண் பெறப்பட்டு ரேஷன் கடையின் முழு செயல்பாடுகளும் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. ரேஷன் கடைகளுக்கு தேவையான அனைத்து பொருட்களும் தட்டுப்பாடின்றி வழங்கப்படுகிறது.தமிழகத்தில் முதல் முறையாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ரேஷன் கடைகளில், பில்போடும் இயந்திரம் வழங்கப்பட்டு அதன் மூலம் பில் போடப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள பகுதி நேர ரேஷன் கடைகளை, பொதுமக்கள் தேவைக்கேற்ப முழு நேர கடைகளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கூடுதலாக தேவைப்படும் இடங்களில் பகுதி நேர ரேஷன் கடைகளும் அமைக்கப்படும். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுகா ஜமனாமுத்தூர் கூட்டுறவு சங்கத்தில் மேற்கொள்வது போல கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வீணாகும் மா பிஞ்சுகளை சேகரித்து ஊறுகாய் தயாரிக்க, கூட்டுறவு சங்கத்தின் மூலம் புதிய சங்கம் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இவ்வாறு கலெக்டர்

பேசினார்.டி.ஆர்.ஓ., பிரகாசம், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அசோக்குமார், துணை தலைவர் அர்ஜீனன், கிருஷ்ணகிரி நகராட்சி தலைவர் தங்கமுத்து, கிருஷ்ணகிரி யூனியன் சேர்மேன் கோவிந்தராஜ், துணை சேர்மேன் ராஜா, நகராட்சி துணை தலைவர் வெங்கடாசலம் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் சந்திரசேகரன் நன்றி கூறினார்.

**"செண்டுமல்லி'யில் கூடுதல் மகசூல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2011,22:50 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த மேல் மலை பகுதியில், பசுமை குடில் அமைத்து சாகுபடி செய்த செண்டுமல்லியில், நான்கு மடங்கு கூடுதலாக விளைச்சல் கிடைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தள்ளனர்.விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதிக பரப்பில் பூ சாகுபடி செய்யப்படுகிறது. ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலை, மலர் சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளதால், இந்த பகுதியில் பசுமை குடில் அமைத்து ரோஜா பூ சாகுபடி செய்யப்படுகிறது.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பரவலாக செண்டுமல்லி பூ சாகுபடி செய்யப்படுகிறது. செண்டுமல்லி பூக்களுக்கு எப்போதும் நல்ல வரவேற்பு இருக்கும். இதனால், கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் ஆண்டுதோறும் செண்டுமல்லி பூ சாகுபடி செய்து வருகின்றனர்.தற்போது, செண்டுமல்லி பூவும் பசுமை குடில் மூலம் சாகுபடி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி அடுத்த மேலுமலை, சூளகிரி பகுதியல் பசுமை குடில் மூலம், செண்டுமல்லி சாகுபடி செய்வது அதிகரித்து வருகிறது. செண்டுமல்லி விதைத்த, 40 நாட்கள் கழித்து செடிகளை பிடுங்கி பசுமை குடிலில் நடவு செய்கின்றனர். நடவு செய்த இரண்டாவது வாரத்தில், செடியில் பூக்கள் பூக்க ஆரம்பிக்கின்றது. சாதாரணமாக, 70 நாட்கள் கழித்துத்தான், செடியில் பூக்கள் அறுவடைக்கு வரும். பசுமை குடிலில் நடும் செடிகளில், 50 நாட்களில் பூக்கள் அறுவடைக்கு வருகிறது.மேலும், பூக்கள் சாதாரண செடிகளில் வளர்வதை காட்டிலும் நான்கு மடங்கு பெரியதாக வளர்க்கிறது. இதனால், விவசாயிகளுக்கு கூடுதலாக லாபம் கிடைக்கிறது. பசுமை குடில் மூலம் சாகுபடி செய்யப்படும் செண்டுமல்லியில், நோய் தாக்குதல் குறைவாக உள்ளதாலும், தண்ணீரின் தேவை குறைந்த அளவே தேவைப்படும். மேலும் பசுமை குடில் அமைக்க, தேசிய தோட்டக்லை அபிவிருத்தி திட்டதின் கீழ், 50 சதவீத மானியம் வழங்கப்படுவதால், பல விவசாயிகள் பசுமை குடில் மூலம் செண்டுமல்லி சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**தமிழகத்தில் நடப்பாண்டில் 115 லட்சம் டன் விவசாய உற்பத்திக்கு திட்டம்: அமைச்சர் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2011,23:37 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : ""தமிழகத்தில் நடப்பாண்டில் 115 லட்சம் டன் விவசாய பொருட்களை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது," என, வேளாண் துறை அமைச்சர் தாமோதரன் பேசினார். பொள்ளாச்சி அடுத்த செல்லப்பம்பாளையத்தில் அரசின் இலவச கிரைண்டர், மிக்சி, மின் விசிறி வழங்கும் விழா நேற்று நடந்தது. பயனாளிகளுக்கு இலவச பொருட்களை வழங்கி வேளாண் துறை அமைச்சர் தாமோதரன் பேசியதாவது: பஸ் கட்டணம், பால் விலை, மின் கட்டணம் உயர்த்தப்பட்டதற்காக மக்கள் தற்போது வருத்தப்படலாம். ஆனால், எதிர்காலத்தில் இதன்மூலம் பயன் பெறுவர். மாநிலத்தில், 80 சதவீதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதால், வேளாண் துறைக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. விவசாயத்தை மேம்படுத்த பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த தி.மு.க., ஆட்சியில், விவசாயிகளுக்காக வாங்கப்பட்ட உரம் முறையாக சென்றடையவில்லை. தற்போது சிறு, குறு விவசாயிகளுக்கு இலவச விதை, விவசாய கலப்பை, இயந்திரம் கிடைக்கவும், அதன்மூலம் உற்பத்தியை பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தில், மீண்டும் இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது முதல்வரின் நோக்கம். இதனால், இந்தாண்டு 115 லட்சம் டன் விவசாய பொருட்களை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு, அமைச்சர் தாமோதரன் பேசினார்.

**வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலை குறைப்பு: அரசு**

நவம்பர் 20,2011,16:21



புதுடில்லி : வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை டன் ஒன்றிற்கு 350 அமெரிக்க டாலரில் இருந்து 125 அமெரிக்க டாலர்களாக மத்திய அரசு குறைத்துள்ளது. இதன் மூலம் சமைய லுக்கான அத்தியாவசிய பொருட்களின் ஏற்றுமதி அதிகரிக்கும் என வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த குறைந்தபட்ச விலை குறைப்பு, பெங்களூரு ரோஸ் வெங்காயம்,

கிருஷ்ணாபுரம் வெங்காயம் உள்ளிட்ட அனைத்து வெங்காய வகைகளுக்கும் பொருந்தும் என வெளிநாட்டு வர்த்தக துறை பொது இயக்குனரகம் தெரிவித்துள்ளது. பெங்களூரு ரோஸ் வெங்காயம், கிருஷ்ணாபுரம் வெங்காயம் ஆகியவற்றின் ஏற்றுமதி குறைந்தபட்ச விலை டன் ஒன்றிற்கு 400 டாலரில் இருந்து 75 டாலராக குறைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் வெங்காய விலைகளின் நிலை அதிகரித்ததன் காரணமாக பிப்ரவரி மாதத்தில் வெங்காய ஏற்றுமதிக்கு அரசு தடை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது. 2011-12ம் நிதியாண்டில் நாட்டின் வெங்காய உற்பத்தி 151.36 லட்சம் டன்னாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**தாய்லாந்து திராட்சை சென்னையில் விற்பனை**

நவம்பர் 20,2011,12:08



சென்னை : தாய்லாந்து நாட்டில் இருந்து, கோயம்பேடு மார்க்கெட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் திராட்சை பழங்களை, அதிகளவில் சில்லரை வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். சென்னை கோயம்பேடு பழ மார்க்கெட்டில், ஆப்பிள், ஆரஞ்சு, சாத்துக்குடி, மாதுளை உள்ளிட்ட பழங்கள் விற்கப்படுகின்றன. அவ்வப்போது, வெளிநாட்டு பழங்களும் இறக்குமதி செய்து விற்கப்படுகின்றன. குறிப்பாக, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆப்பிளுக்கு, இங்கு மவுசு அதிகம். அந்த வரிசையில், அடுத்து வியாபாரிகள் களம் இறக்கியுள்ளது, தாய்லாந்து மற்றும் சீனா நாடுகளில் உற்பத்தியாகும் திராட்சை பழங்கள், நம் நாட்டில் விளையும் திராட்சை பழங்களை விட, அளவில் பெரியதாகவும், சுவையில் சற்று மாறுபட்டும், சுவைக்க இனிதாக உள்ளது.வெளிநாட்டில் இருந்து, குளிர் சாதன வசதி செய்யப்பட்ட பெட்டிகளில் அடைத்துக் கொண்டு வரப்படும் திராட்சை பழங்கள், மிகவும் சுத்தமான முறையில், தெர்மகோல் பாக்சில் வைக்கப்படுகின்றன. சுகாதாரமிக்கதாக பேக் செய்யப்பட்டு, கொண்டு வரப்படும் இந்த திராட்சையை, தற்போது சில்லரை வியாபாரிகள் அதிகம் வாங்கிச் செல்கின்றனர்.திராட்சை மொத்த வியாபாரி மணிவண்ணன் கூறுகையில், "நம் நாட்டில் திராட்சை சீசன் இல்லாத நேரத்தில், வெளிநாட்டில் இந்த திராட்சையை இறக்குமதி செய்து விற்கிறோம். இந்த திராட்சை, அனைவருக்கும் கிடைக்கும் வகையில், விற்பனை செய்கிறோம். இதன் சுவை, விரும்பத்தக்கதாக உள்ளது' என்றார்.